# தட்டெழுத்தும் கணிப்பொறி இயக்கமுறையும்

## அலுவலக செயலாண்மை

## தொழிற்கல்வி

## மேல் நிலை – இரண்டாம் ஆண்டு

தமிழ்நாடு அரசு
இலவசப் பாட நூல் வழங்கும்
திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்

**தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்**
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

©தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2011

குழுத்தலைவர்

**A.** சன்னி லைனல்,
முதுநிலை தொழிற்கல்வி ஆசிரியர்,
ஊரிசு மேல்நிலைப்பள்ளி, வேலூர் - 632 001

மேலாய்வாளர்

**D.** குமார்,
தொழிற் கல்வி ஆசிரியர்,
அரசு மேல் நிலைப்பள்ளி,
காவேரிப்பாக்கம் – 632 508.
வேலூர் மாவட்டம்

ஆசிரியர்கள்

**V.** பரிமளாதேவி,
தொழிற் கல்வி ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி,
ஆலங்காயம் – 635 701
வேலூர் மாவட்டம்

**P.R.** பாலாஜி,
தொழிற் கல்வி ஆசிரியர்,
இஸ்லாமியா மேல் நிலைப்பள்ளி,
பேர்ணாம்பட்டு – 635 810.
வேலூர் மாவட்டம்

பாடங்கள் தயாரிப்பு: தமிழ்நாடு அரசுக்காக
பள்ளிக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு

இந்நூல் 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

# பொருளடக்கம்


## பகுதி – அ

| | | | ப.எண் |
|---|---|---|---|
| 1. | தட்டெழுத்து விசைப்பலகை | | 1 |
| 2. | வேகப் பயிற்சி | | |
| | (அ) | தொடக்கப்பயிற்சி | 2 |
| | (ஆ) | வாக்கியங்கள் மூலமாக | 3 |
| | (இ) | பத்திகள் மூலமாக | 4 |
| | (ஈ) | கையெழுத்து பிரதிகள் மூலமாக | 5 |
| 3. | வேகத் தேர்வு – முதல் தாள் | | 6 |

## பகுதி – ஆ

| | | | |
|---|---|---|---|
| தலைப்புகள் பற்றிய சிறுகுறிப்புகள் | | | 27 |
| தமிழ் தட்டெழுத்து சொற் சுருக்கங்களும் குறியீடுகளும் | | | 29 |
| 1. | புள்ளிவிவரப்பட்டி (Vertical Statement) | | 31 |
| 2. | இருப்புநிலைக்குறிப்பு (Balance Sheet) | | |
| | (அ) | சொத்துக்களும் பொறுப்புகளும் (Assets & Labilities) | 38 |
| | (ஆ) | வரவு செலவு கணக்கு (Statement of Income & Expenditure) | 50 |
| | (இ) | இலாப நட்ட கணக்கு (Profit & Loss Account) | 61 |
| 3. | விளம்பரபட்டியல் (Display) | | |
| | (அ) | விளம்பரம் (Advertisement) | 66 |
| | (ஆ) | அழைப்பிதழ் (Invitation) | 71 |
| | (இ) | அறிவிப்பு (Notice) | 76 |
| | (ஈ) | நிகழ்ச்சிநிரல் (Programme) | 81 |
| 4. | கடிதங்கள் / அரசுஆணைகள் (Letters / Government Orders) | | |
| | (அ) | நேர்முகக் கடிதம் (Demi Official Letter) | 86 |
| | (ஆ) | அரசு ஆணை (Government Order) | 93 |
| | (இ) | அலுவல்முறை அறிவிக்கை (Official Notification) | 98 |
| | (ஈ) | அலுவல்முறை நடவடிக்கை (Offical Procedings) | 103 |

பகுதி –இ


I. தட்டெழுத்து – செய்முறை பயிற்சி –I

மெக்கானிசம் 111

(அ) தட்டச்சு பொறியின் வரலாறு – வகைகள் – பயன்கள் –
உருளைத்தாங்கியும் பயன்களும் – உருளைதாங்கியின்
அளவு கோல்கள் – உருளை – வகைகளும் பயன்களும்
உருளைச் சுழற்றிகள் –இழுவை நாடா – வில்விசை –
வரி இடைவெளி முறைபடுத்தும் நெம்புகோல் – தாள்தாங்கி
தாள் இடது ஓர வழிகாட்டி – தாளை விடுவிக்கும் நெம்புகோள் –
உருளைத்தாங்கியை விடுவிக்கும் நெம்புகோல்கல் –
தேவைக்கேற்ப வரி இடைவெளி அமைப்பான் – விடுபிடி
உருளைவிடுவிப்பான் – எழுத்தச்சாணி – மேல்மட்டத் தாள்
பிடிப்பானும் மேல்மட்டத்தாள் பிடிப்பு சுழற்றிகளும் –
எழுத்தச்சாணி வழிகாட்டி – வரிகாட்டி – அட்டைப் பிடிப்புகள் –
பல்வேறு அளவுகோல்கள் – ஓர நிறுத்திகள் – ஓரவிடுவிப்பான்
அட்டவணை விசை – நாடா நிலைக்காட்டி (நாடா நிறம் காட்டி)
மாற்று விசை – பின் தள்ளும் விசை – இரப்பர் தாங்கிகள் –
உருளைத் தாங்கியின் அளவுகள் – நாடாக்களின் வகைகள்
மற்றும் நாடாக்களை புதுபிக்கும் விதம் – அச்சு முகங்களின்
வகைகள் – விசைப்பலகையின் அமைப்பு – நகரா விசை –
அழிப்பானை பயன்படுத்துதல்

(ஆ) உறையின் மீது முகவரியை தட்டச்சு செய்தல் – தபால் தலை ஒட்டுதல் – தட்டச்சு பொறியை பேணி பாதுகாத்தல் – சுத்தம் செய்து எண்ணெய் இடுதல் – பொறியை பற்றி அக்கரை கொள்ளுதல். 128

(இ) நகல் பெருக்கித் தாள்களின் வகைகள் – பாதுகாக்கும் முறைகள் – திருத்தும் மையினை பயன்படுத்துதல் – எழுத்தாணியும், கையெழுத்து அட்டையும் நகல் பெருக்கித் தாளின் ஒட்டுமுறை. 144

II. கணிப்பொறி இயக்கமுறை – செய்முறை பயிற்சி II பக்கம்

அதிகாரம் –1 ஸ்டார் ஆஃபிஸ் ரைட்டர் (StarOffice Writer) 150

ஓர் அறிமுகம் – ஒரு புதிய ஆவணத்தை உருவாக்குதல் – ஆவணத்தில் உரையைத் தட்டச்சு செய்தல். – ஆவணங்களைச் சேமித்தல், மூடுதல் மற்றும் திறத்தல் – ஆவணத்தின் பல பகுதிகளுக்குச் செல்லல் – ஆவணத்தை திரை உருளல் செய்தல் – பிழை திருத்துதல் – உரையைச் சேர்த்தல் –உரையைத் தேர்ந்தெடுத்தல் – உரையை நகர்த்துதல் – உரை நகல் எடுத்தல்வேண்டிய சொல் அல்லது உரைப் பகுதியைக் கண்டுபிடித்து மாற்றுதல் – சுருக்கம் – பயிற்சிகள்

அதிகாரம் – 2 உரை வடிவூட்டல் 162

வடிவூட்டல் விருப்பங்கள் – பத்தி இசைவு – உரையை உள்தள்ளல் – வரி இடைவெளியை மாற்றுதல் – புல்லட் குறி மற்றும் எண்வரிசையை உருவாக்குதல் – ஸ்டைல்களைப் பயன்படுத்தி வடிவூட்டல் – ஸ்டார் ஆஃபிஸ் உதவி – சுருக்கம் – பயிற்சிகள்

அதிகாரம் – 3 எழுத்துப் பிழை திருத்துதல் 171

எழுத்துப் பிழை திருத்துதல் – ஆவணத்தை தட்டச்சு செய்து முடித்தபின் எழுத்துப்பிழை சரி செய்தல் – தானியங்கு சரி செய்யும் தேர்வு – தானியங்குசரி செய்யும் தேர்வு – தானியங்கு சரி செய்யும் பட்டியலில் ஒரு சொல்லைச் சேர்த்தல் – சுருக்கம் – பயிற்சிகள்.

அதிகாரம் – 4 அட்டவணையில் வேலை செய்தல் 175

ஒரு எளிய அட்டவணையைச் செய்தல் – அட்டவணையில் தரவுகளை நுழைத்தல் – வரிசை மற்றும் நெடுவரிசைகளை நீக்குதல் மற்றும் சேர்த்தல் – குறுக்கு வரிசை / நெடுவரிசையின் அகலத்தை மாற்றுதல் – அட்டவணை வடிவூட்டல் கருவிப்பட்டை – சுருக்கம் – பயிற்சிகள்

அதிகாரம் – 5 பக்க வடிவமைப்பு 181

ஓரத்தை மாற்றுதல் – பக்கத்தின் அமைவுகள் – தலைப்பு அடிக் குறிப்புகளை உருவாக்குதல் – சுருக்கம் – பயிற்சிகள்.

அதிகாரம் – 6 அட்டவணைச் செயலி 186

முன்னுரை – ஸ்டார் ஆஃபிஸின் ஸ்டார் கால்க் பயன்படுத்துவது எப்படி ? – அட்டவணைக் கோப்பின் தரவுகளை பதிப்பாய்வு செய்தல் – வாய்ப்பாடுகளை அட்டவணையில் உள்ளிடல் – கட்டளை – நுண்ணறைப் பார்வையிடல் – சார்புகளின் பயன்பாடு – தேதிக் கணக்கீடு – அட்டவணைத் தாளை வடிவமைத்தல் – அட்டவணைத் தாளின் நெடுவரிசை அகலத்தையும் வரிசையின் உயரத்தையும் மாற்றுதல் – அட்டவணைத் தாளில் நுண்ணறைகள், வரிசைகள், நெடுவரிசைகள் ஆகியவற்றைச் சேர்த்தல் – அட்டவணைத் தாளில் நுண்ணறைகள், வரிசைகள் நெடுவரிசைகள்இவற்றை நீக்குதல் – அட்டவணைத்தாளில் படங்களையும் சிறப்புக் குறியீடுகளையும் சேர்த்தல் – அட்டவணைத் தாளில் வரைபடம் வரைதல் – பொருள் சேர்த்தல் – அட்டவணைத் தாளில் வரைபடங்களுடன் செயல்படல் – ஒன்றுக்கு மேற்பட்ட அட்டவணைக் கோப்புகளில் செயலாற்றில் – அட்டவணைத் தாள்களை அச்சிடல் – ளுவயச ஊயடஉ – இன் தரவுத்தள சார்புகள் – சுருக்கம் – பயிற்சிகள்.

அதிகாரம் – 7 பல்லூடக அறிமுகம் 213

பல்லூடகம் என்றால் என்ன ? – பல்லூடகப் பயன்பாடுகள் – பல்லூடகக் கூறுகள் : நிழற்படங்கள், ஒலி, அசைவுப்படங்கள் ‐ ஒளிக்காட்சி பல்லூடகப் பயன்பாடு – சுருக்கம் – பயிற்சிகள்.

அதிகாரம் – 8 நிகழ்த்துதல் 221

அறிமுகம் – ஓர் அடிப்படை நிகழ்த்தல் – நிகழ்த்தலைக் கையாளல் – நிகழ்த்தலை தனிப்பயனாக்கல் – நிகழ்த்தலை அச்சிடல் – சுருக்கம் – பயிற்சிகள்.

III பொதுத்தேர்வு – மாதிரி வினாத்தாள் 234

IV. அக மதிப்பீடு மொத்த மதிப்பெண்கள் 50 242

(அ) செய்முறை பயிற்சி –I (தட்டெழுத்து) மதிப்பெண்கள் 25

(ஆ) செய்முறை பயிற்சி – II (கணிப்பொறி இயக்கமுறை) மதிப்பெண்கள் 25

## பகுதி – அ


### 1. தட்டெழுத்து விசைப்பலகை




தட்டெழுத்து பலகை விளக்கப் படம்

# 2 வேகப் பயிற்சி

## (அ) தொடக்கப்பயிற்சி :



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 123454 | 098767 | 123454 | 098767 | 123454 | 098767 | 123454 | 098767 |
| 123454 | 098767 | 123454 | 098767 | 123454 | 098767 | 123454 | 098767 |

என 3 பக்கங்கள் தட்டச்சு செய்யவும்

கீழ்க்கண்ட ஒவ்வொரு வார்த்தையையும் 5 வரிகள் தட்டச்சு செய்யவும்

| | | | | |
|---|---|---|---|---|
| ஹரி | ரஸ்தா | நஷ்டம் | குமாஸ்தா | மாஜிமந்திரி |
| ஜூன் | ராஜு | புஷ்பம் | ஜுப்பிட்டர் | ஷாஜஹான் |
| ஸ்ரீமதி | ஸ்ரீநகர் | கஷ்டம் | க்ஷேமநலம் | மஹாலக்ஷ்மி |
| ஜட்ஜ் | புஸ்தகம் | ஸரஸ்வதி | ரூபஸ்ரீ | ஹோமியோபதி |
| நேருஜீ | ஸ்ரீநிவாஸ் | லக்ஷ்மணன் | ஹோட்டல் | ரோஜாமொட்டு |
| ஸ்ரீநிதி | ஸ்வேதா | திக்ஷயா | ஹரிபிரஷாத் | வைஜெயந்தி |

கீழ்கண்ட ஒவ்வொரு வரியையும் 20 தடவைகள் பிழையில்லாமல் தட்டச்சு செய்யவும்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னு | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## (ஆ) வாக்கியங்கள் மூலமாக :

**கீழ்காணும் ஒவ்வொரு வாக்கியத்தையும் 20 தடவைகள் பிழையில்லாமல் தட்டச்சு செய்யவும்**

### ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.
பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தொம்பித்
தேரினும் அஃதே துணை.
ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.
மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்போழுக்கம் குன்றக் கெடும்.
அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.
ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.
ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.
நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.
ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.
உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

### கூடா நட்பு

சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.
இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.
பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது
முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.
மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று.
நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.
சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க
வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.
தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.
மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.
பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல்.

நீதி மொழிகள்:

- கொடுமை உள்ளவன் மேல் பொருமை கொள்ளாதே. அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதே.
- சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதன் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக் கொள்.
- நல்லவனவற்றை சிந்தி. நல்ல வார்த்தைகளையே பேசு. நல்ல காரியங்களையே செய்.
- கற்றோருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு.
- பெருமை உள்ளவனுக்கு கடவுள் எதிர்த்து நிற்கிறான்
- ''நான்'' என்கின்ற சுயம் மனிதனை அழிக்கும்

## (இ) பத்திகள் மூலமாக :

கீழ்கண்ட ஒவ்வொரு பத்தியையும் 20 தடவைகள் பிழையில்லாமல் தட்டச்சு செய்யவும்

ஆதியில் மனிதன் சிந்திக்கத் தெரியாமலே விலங்குகளாய் கால்போன போக்கில் திரிந்து பலகாலம் வாழ்ந்தான். அதில் சிலரே மனம் என்பதைச் சிறிது சிறிதாகப் பயன்படுத்தி மனிதனாக வளர்ச்சி அடைந்தனர். அதற்கு அவனுக்கு மனம் என்ற ஆறாவது அறிவே பயன்பட்டது. ஆதிமனிதன் அறிவுள்ள மனிதனாக மாறி பல ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் இன்றும் சிலர் அந்தப் பின்வழிக்கே செல்ல முயல்கின்றனர்.

வாழ்வின் வரைமுறை தெரியாது வாழ்வின் உன்னதம் அறியாது தாறுமாறாய் திரிகின்றனர். இதை உணர்ந்த நம் முன்னோர்கள் பலர் தன் வாழ்க்கையில் அனுபவ மணிகளை அங்கங்கே உதிர்த்தனர். அவற்றை ஒன்றாகக் கோர்த்து தொகுத்துள்ளேன். இவற்றைப் படித்துவிட்டால் போதாது, மனதில் பதித்துவிடவேண்டும். அம்மணிகளை மாலையாகக் கோர்த்து மனம் எனும் ஆண்டவனுக்கு சூட்டவேண்டும்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் மணிமொழியும் 'பணமிருந்தால் பத்தும் வந்து சேரும்' எனும் மணிமொழியும் நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் எனும் மணிமொழியும், தலைமைத்துவம் இல்லாத வாழ்க்கை அனாதை வாழ்க்கை எனும் மணிமொழியும், மனிதன் மனிதனாக வாழ்வதே ஆன்மிகம் எனும் மணிமொழியும் நம் வைர நெஞ்சில் பதித்த முத்துமணிகளாக ஒளிவீசினால் நினைத்தது அனைத்தும் சக்தியாக மாறும். உயர்ந்த எண்ணத்தையே வாழ்வாக்கி எதிலும் உணர்வோடு காலத்தை நிர்ணயித்து செயல்பட்டு, ஆரம்ப முதல் இறுதிவரை இன்பமாக மகிழ்ச்சியாக வாழ்வோம்.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒரு தனித்தன்மை உள்ள மனிதனாக உருவாக்கவேண்டும். அந்தத் தனித்தன்மை மிளிர அவன் முதலில் உடல் நலம் பிறகு பொருளாதாரம். இவற்றை நல்ல முறையில் பெற்றானானால் அவனுக்கு சமுதாயத்தில் தலைமைத்துவமும் செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்று வாழ்வின் உன்னத நிலைக்கு உயர்ந்துவிடுவான்.

மனிதனாகப் பிறந்த நாம் மனிதனாக வாழ்வதே ஆன்மிகம். விலங்கினங்களும் மனித இனங்களும் ஒன்றாக தோன்றி ஒன்றாக வாழ்ந்ததுதான். ஆனால் விலங்குகள் விலங்குகளாகவே இருக்கின்றன. ஆதி மனிதன் புதிய மனிதனாகப் புதிய உலகு படைக்கும் மனிதனாக மாறி உலக அரங்கில் இயற்கையுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றான். என்றால் அவனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மனம் என்ற ஆறாவது அறிவுதான்! வாழ்வில் அனைத்தையும் தவறாகச் செய்துவிட்டு கடைசியில் ஆண்டவனிடம் செல்கின்றனர். ஆண்டவன் எங்கும் தனியாக இல்லை. உடலே கோயில் உள்ளமே தெய்வம்.

(ஈ) கையெழுத்து பிரதிகள் மூலமாக :

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

பழமொழி என்பது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தன் வாழ்க்கையின் அனுபவ மொழியாக, அனுபவித்து தோன்றியது. சோகம், தத்துவம், எதார்த்தம், மகிழ்ச்சி, விவசாயம், பொருளியல் என எல்லாத் துறைகளுக்கும் தோன்றியது. அவை மனிதன் ஊழிக் காலம் வரை மெய்க்கும் என்பது உறுதி.

நம் முன்னோர்கள் பழமொழியின் மேலாக பொன் மொழியாக 'மனமிருந்தால் மார்க்கமுண்டு' 'மனம் போல் வாழ்வு', 'மனம் போல் மாங்கல்யம்' 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்', 'மனசாட்சியை விட மறுசாட்சி வேண்டாம்.' 'மனத்திற்கு மனமே சாட்சி மற்றதற்கு தெய்வமே சாட்சி,' 'மனப் பொருத்தம் இருந்தால் மற்ற பொருத்தம் வேண்டுமா? 'மனம் தடுமாறினால் மாற்றானுக்கு வலிமை.' 'அகம் குளிர முகம் மலரும்' 'மனம் இருந்தால் மலையிலும் வாழலாம்' 'மனச் சலன யின்றி மகிழ்வுடன் பேசு' 'முகத்தில் அக அழகு பார்க்கலாம்' மனதின் உறுதி மங்கைக்கு அழகு,' 'மனது நிறைந்தால் வயிறு நிறையும்'. போன்ற கருத்துகள் கூறியுள்ளனர்.

மனதைப் பலர் பல வித பிரிவுகளாகவும் பிரித்து அதன் தன்மைகளைக் கூறுவர். பதஞ்சலி முனிவர் மனத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கிறார்.

## 3. வேகத்தேர்வு – முதல் தாள்

நகர்ப் பகுதிகள் மிக விரைவாக வளர்ந்து வரும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நம் மாநிலத்தில் நகர்ப்பகுதிகளின் நாற்பது சதவீகிதம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகம் திறம்பட நடந்தால், நகர்ப்புற வளர்ச்சியும் மேம்பாடு அடையும். தற்போது தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்பத்தூர் ஆகிய மூன்று மாநகராட்சிகளும், நூறு நகராட்சிகளும், ஏழு நகரியங்களும் உள்ளன. நகராட்சிகளும், நகரியங்களும் ஆண்டு வருமானத்திற்கேற்ப ஐந்து நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலை சீரடைய உடனடி கவனம் தேவைப்படுகிறது. அவற்றின் நிதி நிலை முபமையாக சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. நகராட்சி நிருவாகத்தில் சீர்திருத்தங்கள் செய்வது குறித்து பரிந்துரைக்க உயர் மட்ட வல்லுநர்க் குழு ஒன்றை அரசு அமைக்கவிருகிக்கிறது. நகராட்சிகள், மாநகராட்சிகளின் நிருவாக மேம்பாட்டிற்காக கொள்கைகளை நிர்ணயித்து, தொலைநோககுத் திட்டங்களை வகுப்பதுடன் திட்டங்களின் செயற்பாட்டைக் கண்காணிக்க மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் மாநில ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படும். நகராட்சி நிருவாகம் மேம்பாடு அடையும் நோக்குடன் நகராட்சிப் பணிகளைக் கண்காணித்து மேற்பார்வையிட மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட இருக்கின்றன. நகராடசிகள், மாநகராட்சிகளின் பணியாளர்களை அதிகாரிகளையும் ஊக்குவிக்கவும் கௌரவிக்கவும் பதக்கங்களும், பரிசுகளும் வழங்கும் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் விதிக்கப்படும் சொத்து வரி விகிதம் பல ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்து வருகின்றது. நாட்டின் வெவ்வேறு நகரங்களில் வெவ்வேறு விதமான வரி விகித முறைகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இந்த முறைகளைப் பரிசீலித்து, நமது மாநிலத்துக்குத் தகுந்த முறை ஒன்றை நாம் ஏற்படுத்த வேண்டும்.

தொழில்கள், வணீகங்கள், கைவினைக ள் மீதான தொழில் வரியை விதிக்கத் தேவையான சட்டங்கள் கொண்டு வரப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ.1,500க்குக் கீழ் ஊதியம் பெறும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலாக்ளுக்கும் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இந்த வரி விதிப்பு முறையானது குறைந்த வருமானம் உள்ள பிரிவினருக்குக் குறைவாக இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வரியின் மூலம் வசூலிக்கப்படும் முழுத் தொகையும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கும். குடிசைப் பகுதிகளில் சாலை மேம்பாடு, மழை நீர் வடிகா, குடிநீர் வசதி போன்ற வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இருபது இலட்சம் ரூபாய் நகராட்சிகளுக்கும் நகரியங்களுக்கும் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் இருபது நகராட்சிகளில் குடிசைப் பகுதிகள் மேம்பட ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும்.

கதர், கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை துரிதப்படுத்தி நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன், கதிர்–கிராமத் தொழில் வாரியம் துவக்கப்பட்டது. குறைந்த மூலதனத்தில் நலிவுற்ற மக்களுக்காக அவரவர் இருப்பிடங்களிலேயே தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டுள் ளகதர் வாரிய அலகுகள் மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது கதர்–கிராமத் தொழில் வாரியத்தின் தலையாய நோக்கமாகும். அது போன்றே, ஆங்காங்கு கிடைக்கு மமூலப்பொருட்களைக் கொண்டு, கிராமக் கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே, குறைந்த மூலதனத்தில் கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்து, வேலை வாய்ப்பினை ஏற்படுதூதித் தருவதே கிராமத் தொழில்களின் தலையாய நோக்கமாகும். இவ்வடிப்படை நோக்கங்களிலேயே திட்டங்களை வகுத்து, தொழில்களை ஆரம்பித்து, அவற்றை மாநிலம் முழுவதும் செயல்படுத்துவதும், இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

கதர்த் திட்டங்கள் உண்ணா எண்ணெய், சோப்புத் தொழில் ஆகியவை லாரியத்தின் தொழிற்பிரிவுகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. பனைவெல்லம், பனங்கற்கண்டு, பழுப்புச் சர்க்கரை, பருப்பு மற்றும் தானிய வகைகள், தும்பு, சுண்ணாம்பு, பிரமபு, மூங்கில் ஆகிய தொழில்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்துத் தொழில்களும் வாரியத்தின் தொழிற்பிரிவுகள், தொழிற் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார்கள் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன. கதர்–கிராமத் தொழில் ஆணைக்குழு இந்திய அளவில் திறன் ஆய்வு செய்தது. இதில் தமிழ்நாடு முதல் இடம் வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பவானிசாகரில் மிகப் பெரிய அளவிலான ஒரு சாயச் சலவை அச்சு அலகும், தாராபுரம், திருப்பூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஐந்து சிறிய அளவிலான அலகுகளும், வாரியத்தின் கீழ் இயங்கி வருகின்றன. நுகர்வோாகளின் தேவையை நிறைவேற்ற இந்த அலகுகள் அறுபது இலட்சம் மீட்டர் கதர்த் துணிகளை ஆண்டு தோறும் பதப்படுத்துகின்றன.

நூற்பாளர்களுக்கும் நெசவாளர்களுக்கும் வாரியம் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நூற்பாளர்கள் மற்றும் நெவசாளர்கள் நன்மைக்காக நல நீதியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள், தங்கள் ஊதியத்திலிருந்து பத்து விழுக்காடு செலுத்துகின்றார்கள். அதே அளவினை வாரியம் தனது பங்காகச் செலுத்திவருகிறது. இது தவிர, நூற்பாளர் மற்றும் நெசவாளர்கள் ஊதியத்தில் **8.33** விழுக்காட்னை வாரியம் ஊக்க ஊதியமாகவும் அறித்துவருகிறது. வாரியம், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கம், மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள், மாநில பனைவெல்ல இணையம் ஆகிய மூன்று தொழில் கூட்டுறவு முறைகள் மூலம் பனைத் தொழிலை செயல்படுத்திவருகிறது. நம் நாட்டில் அதிக அளவில் பனை மரங்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு தான். இந்தியாவிலுள்ள மொத்தம் எட்டு கோடி பனை மரங்களில் தமிழ்நாட்டில் ஐந்து கோடி பனை மரங்கள் உள்ளன.

## வேகப் பயிற்சி

மாநிலத்தில் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் விளம்பரம் ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பொறுப்பேற்றுள்ளது. கொள்கை பரப்புதல், விளம்பரம் செய்தல் ஆகிய பணிகளை இது தீவிரப்படுத்தியுள்ளது. மாநிலத்தில் வெளிவரும் முக்கியமான வெளியீடுகளில், கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியமான திட்டங்கள் குறித்து தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் விளம்பரங்கள் வெளியிட்டு வருகிறது. தொலைக் காட்சி மற்றும் வானொலி ஆகியவற்றைப் பெரிதும் பயன்படுத்தி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கம் மற்றும் நன்மைகளைப் பரப்பி வருகிறது. கொள்கைப் பரப்புப் பணிகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நடமாடும் ஊர்திகளைப் பயன்படுத்தி வருகிறது. கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதன் அவசியத்தையும், கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை எடுத்துரைக்கும் வகையிலும் சினிமாப் படங்கள் தயாரித்துள்ளது.

அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினைக் கொண்டாட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஏற்பாடு செய்கிறது. இது தவிர, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நூலகங்கள் நடத்தியும், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தியும், பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளில் பங்கு கொண்டும் வருகின்றது. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும், மாத இதழ்கள் வெளியிட்டும் நூலகங்கள் நடத்தியும் வருகின்றன. மிகச் சிறந்த முறையில் செயல்படும் கூற்டடுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் திங்களில் கொண்டாடப்படும் அனைத்திந்தியக் கூட்டுறவு வாரெ விழாவின்போது கேடயங்கள் வழங்கப்படுகின்றன. இள நிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலும், மாவட்டங்களிலுள்ள பதினைந்து கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் அளிக்கப்படுகிறது.

உலக வங்கி உதவியின் கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், மூன்றாம் திட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பணியாளர்களுக்கு கிடங்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும் ஒன்றாகும். இதன்படி, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி இத்திட்டத்தை செயல்படுத்தும் முகவராக உள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு சென்னையில் வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம், தஞ்சாவூரிலுள்ள சாமியப்பா கூட்டுறவுப் பயிற்சி நிலையம் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள இராமலிங்கம் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் இத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையத்திற்கென மாதவரத்தில் ஐந்து ஏக்கர் நிலத்தில் மூன்று கோடி ரூபாய் செலவில் ஒரு கூட்டம் கட்டப்பட்டு வருகிறது.

## வேகப் பயிற்சி

தமிழர்களின் பெருமை வாய்ந்த மரபினையும் அவர்களின் நுண்மான் நுழைபுலத்தை, கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் கலை, பண்பாட்டினையும் உலகறியச் செய்வதே அரசின் தலையாய கொள்கையாகும். கங்கை முத்துப் பிள்ளை எழுதிய நாட்டியப் பாடல்களின் திரட்டு எனப்படுகிற 'நாட்டிய நன்னூல்' சுவாமி விபுலானந்தா எழுதிய தமிழ், ஆங்கில நாடகங்கள் பற்றிய ஒப்பாய்வு நூலாகிய 'மதங்க சூளாமணி' ஆகியவற்றை மீண்டும் அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் பண்பாட்டு மாபினைத் தெளிவுபடுத்தும் தகவல்களையும், விவரங்களையும், பொருட்களையும் கிராமக் களஞ்சியம் என்னும் நூலில் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, அவை தவீர ஆய்வுக்குப் பின் வெளியிடப்படும்.

தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களினின்றும் தேர்ந்தெடுத்த தீஞ்சுவைப் பாடல்களும், இசை நுணுக்கங்களையும் ஓசை நயங்களையும் தெளிவுபடுத்துகிற நாட்டுப்புறப் பாடல்களும், உலகெங்கும் பரவும்படிச் செய்வதற்காகக் 'காசெட்டு'களில் பதியப்பட்டுள்ளன. மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா கொண்டாடியபோது, புகழ்வாய்ந்த பாடகர்— இசை வல்லுநர் ஒருவர், பாரதியாரின் பாடல்களை இசை ஞானத்துடன் எடுத்துப்பாடின பாட்டுகள் இசைத்தட்டுகளில் வடிக்கப்பட்டன. இத்தகைய இசைத்தட்டு காசெட்டுகள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அமைந்துள்ள தமிழ்ச் சங்கங்கள் பலவற்றுக்கும் ஏற்கெனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் கலையினைப் பாதுகாத்துப் பேணிவரவும், அதன் வளத்தையும் சிறப்பையும் அனைவரும் அறியச் செய்யவும், சென்னையில் நாட்டுப்புறக் கலை விழா நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கோயில்களில் காணும் புகழ் வாய்ந்த சிற்பங்களையும் சிலைகளையும் நிழற்படமெடுத்த பலவண்ண வெளியீடு, அடுத்த நிதியாண்டில் வெளியிடப்படும். தமிழ் மரபினை விளக்கிக் காட்டும் அரும்பொருட்காட்சியகம் ஒன்று அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய அரிய கலைப் பொருட்கள், நாணயங்கள், பாத்திரங்கள் முதலியவை சேகரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்படும். சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள மலர்களும் செடிகளும் முலீகைப் பண்ணையில் வளர்க்கப்படும். இம்மூலிகைப் பண்ணை அடுத்த நிதி ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பண்டைய தமிழ் மன்னர்கள், புலவர்களுக்கும், இசை வல்லுநர்களுக்கும், ஓவியர்களுக்கும் ஏனைய கலைஞர்களுக்கும் அளித்து வந்த ஆதரவை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவற்றைப் பற்றிய திரைப்படங்கள் தயாரிக்கப்படும். பல்வகைக் கலைத் துறைகளில் திறமை பெற்று, ஆனால் தொழிவில் முன்னுக்கு வரவியலாத கலைஞர்களைக் கண்டறிந்து, அவர்கள் தொழிலுக்கு ஆதரவளிக்கவும், அவர்கள் தயாரித்த பொருட்களைப் பொருட்க காட்சிகளில் வைக்க ஏற்பாடு செய்யவும். மாவட்டம் கலை மன்றங்களை ஏற்படுத்துவதென்று அரசு முடிவு செய்துள்ளது.

## வேகப் பயிற்சி

பண்பாட்டைப் பேணுவதிலும் அதனைச் சிறந்த முறையில் ஆக்கவும் கல்வி உறுதுணை புரிகிறது. மக்களின் பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள், பாரம்பரியம் ஆகியவற்றைப் பண்பாட்டில் அடக்கலாம். பண்ாட்டைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் அச்சமுதாயத்தில் அறிவுக் களஞ்சியம், நிறுவனங்கள், சமயம், பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள், தொழிகள் ஆகிய அனைத்தையுமே அறிய வேண்டும். அரசியல், சமயம், சமுதாய வாழ்க்கை, மக்கள் தொடர்பு ஆகியவற்றைக் கொண்டே ஒரு நாட்டின் பண்பாட்டை நாம் மதிப்பீடு செய்கிறோம். பண்பாடு என்பது சிக்கலானது, மற்றும் தனக்குத்தானே தேடி உருவாக்கிக் கொண்ட கருவிகள், கட்டிடங்கள், அறிவு, நம்பிக்கைகள், மதிப்புகள், மனப்பான்மைகள், சம்பிரதாயங்கள் ஆகியன எல்லாம் பண்ாட்டில் அடங்கும். பண்பாட்டை விளக்குவது சிறிது கடினமானது. மக்களின் பண்பாடு என்பது எல்லா இலட்சியங்கள், நிறுவனம், சமூக வழிகள், பழக்க வழக்கங்கள் மற்றும் மனிதனால் செய்யப்பட்ட பிற பொருள்கள் ஆகியவற்றை குறிக்கிறது. சில சமயங்களில் பண்பாடு என்பது ஓர் உயர்ந்த பண்பு, உயர்ந்த அழகு ஆகியவற்றையும் குறிக்கிறது. இது இசை, இலக்கியம், கலை ஆகியவற்றையும் தன்னுள் அடக்கியது.

கல்வியும் பள்ளி வாழ்க்கையும் ஒருவனது பள்ளி நடத்தையை நெறிப்படுத்துகின்றன. பண்பாடின் மெருகு இல்லாவிடில் மனிதன் ஒரு சாதாரண உயிரியல் பிராணியேயாம். விலங்குளைப் போன்றே அவனும் வரன்முறையற்ற வாழ்க்கை வாழ்வான். எனவே, மனிதனுக்கு அழகு தருவது பண்பாடே. மனிதனின் கலாச்சாரத்தை அவனுடைய நடத்தையிலிருந்து அறிந்து கொள்ளலாம். பள்ளியில் பயிலுகின்ற மாணக்கர்களை ஒரு குறிப்பிட்ட பண்பாட்டிற்கு ஏற்றவாறு தயார் செய் யவேண்டும். பின்னர் அவர்கள் வயது வந்தவர்களானபோது சமுதாயத்தின் பண்பாடு, பாரம்பரியம், அதன் நெறிமுறைகள் ஆகியவற்றுக்கு இயைந்து செயல்படுவர். பண்பாட்டிற்கு ஏற்றவகை பணியைச் செய்வர்.

இளைஞரும் பெண்டிரும் பண்பாட்டின் பாரம்பரிய எண்ணங்களை பழக்க வழக்கங்களைத் தம் முன்னோரிடமிருந்து பெற்று அவற்றை மதித்துப் போற்றி அவற்றினின்றும் வழுவாது தம் வருங்காலச் சந்ததியினருக்கும் வழங்க வேண்டும். இவ்விதமாகச் சமுதாய வாழ்க்கை காலப்போக்கில் ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினரிடையே தொடரும்போது மெருகுபெற்று ஒளிவிடுகின்றன. தன் பாடம் மற்றும் பாடம் சார்ந்த பிற ஏற்பாடுகள், செயல்கள் வழியாக இப்பண்பாட்டுச் செயல்பணியை செய்ய வேண்டியது பள்ளிக்கே உரித்தான கடமையாகும். சமயோசித புத்தியும் சாமர்த்தியமும் கொண்ட ஆசிரியர் மட்டுமே இந்த வகையான பண்பாட்டுச் சூழலைப் பயன்படுத்த மாணாக்கர் நம் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுவார். பாடங்களில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்கள், கற்றல், கற்பித்தல் செயல்களில் புதுமைகள் அனைத்தும் சமுதாயத்தில் பெருகிவரும் அல்லது மாறிவரும் பண்பாட்டுத் தொகுப்பையே குறிப்பிடுகின்றன.

உலகில் நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்தே ஏழ்மை ஒரு விவாதப் பொருளாக உள்ளது. ஐந்தாம் நூற்றாண்டில் ப்ளாட்டோ அதிகமான ஏழ்மையும், அதிகமான பண பலமும் மக்களிடம் காணப்பட்டால் அது தீங்கு விளைவிக்கும் என்றார். ஏற்கனவே வசதி படைத்தவர்கள் மேலும் வசதியைப் பெருக்கிக் கொள்வதை முன்னேற்றம் எனக் கருத முடியாது. வசதியில்லாதவர்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதே முன்னேற்றம் என முன்னாள் அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் கூறினார். ஏழைகளின் வாழ்க்கைத் தரம் பற்றி பேசாத தலைவர்களே கிடையாது என்ற போதிலும் ஏழ்மை என்றால் என்ன என்பதை வரையறுப்பது மிக முக்கியமானதாகும். காரணம், இந்தியா போன்ற ஒரு நாட்டில் பல இலட்சம் கோடி ரூபாய்கள் ஏழ்மை மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்குச் செலவிடப்படுகிற காரணத்தால் அவை சரியானவர்களுக்குத்தான் போய்ச் சேருகின்றனவா எனும் கேள்வி எழுகிறது. அதனால்தான் ஏழ்மை என்றால் என்ன, ஏழைகள் யார் எனும் கேள்வி மிக முக்கியமானது ஆகிறது.

ஏழ்மை பற்றி உலக அறிஞர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் ஆராய்ச்சியை சீபாம் ரவுண்ட்ரி எனும் ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் நடத்தினார். அதன்படி, தங்களது உடல் பராமரிப்பிற்குத் தேவையான உணவு, குடியிருக்கும் இடத்திற்கான வாடகை, ஆடைகள் ஆகிய பொருள்களுக்காகும் செலவுகளைச் செய்ய முடியாதவர்கள் ஏழைகள். இதன்பின் உலக வங்கி தங்களது ஆராய்ச்சியாளர்களை முடுக்கிவிட்டு உலகின் அறுபத்தாறு நாடுகளின் கணக்கெடுப்பினை ஒப்பிட்டு ஒரு நாளைக்கு ஒரு டாலர் வருமானத்திற்கு கீழே உள்ளவர்கள் ஏழைகள் எனும் கணக்கினைப் பிரசுரித்தது.

2001-ம் ஆண்டின் உலக வளர்ச்சி அறிக்கையின்படி ஒரு நாளைக்கு 1.08 டாலர் வருமானம் என்பதையே வறுமைக் கோட்டின் குறியீடு எனக் கணக்கில் கொள்ளப்பட்டது. இதன்படி கிட்டத்தட்ட நூறு கோடி மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள் எனும் கசப்பான உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டது.

உலகெங்கிலும் இதுபோன்ற கணக்கெடுப்புகள் தனி மனிதனின் வருமானத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டு, ஏழ்மையை ஒழிப்பதற்கு எந்த மாதிரியான திட்டங்கள் உருவாக்கி நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் எனும் விவாதம் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இந்தியாவில் ஏழ்மையை ஆராய்ச்சி செய்து புதிய விதிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. கிராமப்புற மக்களின் ஒரு நாளைக்குத் தேவையான உணவு எவ்வளவு எனக் கணக்கிடப்பட்டது. மேலும் சராசரியான உணவுத் தேவை, மக்களின் வயது, ஆண் பெண் வித்தியாசம், அவர்கள் செய்யும் வேலை ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. அதன்படி ஒரு நாளைக்கு கிராமப் புறத்தில் 2400 கலோரி எரிசக்தியை அளிக்கத் தேவையான உணவு வாங்க ஆகும் செலவு, வசிக்க வீடு, உடுத்த உடை ஆகிய செலவுகளை அன்றைய விலைவாசிப்படி கணக்கிட்டு, அவ்வளவு வருமானத்திற்கு கீழே வாழ்பவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கிறார்கள் என கணக்கிடப்படுகிறது.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

கேள்விகளைக் கேட்கக் கேட்கத்தான் தெளிவு பிறக்கும். ஆசிரியர்களிடம் மாணவர்கள் கேள்விகள் கேட்டால்தான் பாடத்தில் அவர்களுக்கு தெளிவு பிறக்கும். கோர்ட்டில் வக்கீல்கள் கேள்வி கேட்டால்தான் உண்மை வெளிப்படும். நோயாளியிடம் டாக்டர் கேள்வி கேட்டால்தான் நோயாளிக்கு என்ன பிரச்சனை என்பதை டாக்டரால் புரிந்து கொள்ள முடியும். புதிது புதிதாய் கேள்விகள் கேட்கப்படும் போதுதான் புதிது புதிதாய் பதில்கள் பிறக்கும். விளக்கங்கள் கிடைக்கும். அதனால், உங்களுக்கு எந்த ஒரு விஷயத்தில் எந்த ஒரு சந்தேகம் ஏற்பட்டாலும் உடனடியாக அதை கேட்டுவிடுங்கள். கேள்வி கேட்பதில் தயக்கமே வேண்டாம். கேள்விகள் தான் நம்மை தெளிவுபடுத்திக் கொள்ளும் சிறந்த வழிமுறை. கேள்விகள் இருவகையானது. ஒன்று, நாம் மற்றவர்களிடம் கேட்பது. இரண்டு, நமக்கு நாமே கேட்டுக் கொள்வது. மற்றவர்களிடம் நாம் கேட்கும் கேள்விகளுக்கு கட்டுப்பாடுகள் உண்டு. இன்ன மாதிரி கேள்விகள்தான் அவர்களிடம் கேட்க வேண்டும் என்று இருக்கிறது. அதனால், மற்றவர்கள் சொல்லக் கூடிய, மற்றவர்களை பாதிக்காத, மற்றவர்களுக்கு சங்கடங்களை உண்டாக்காத கேள்விகளை மட்டுமே கேளுங்கள்.

நமக்கு நாமே கேட்டுக்கொள்ளும் கேள்விக்கு கட்டுப்பாடுகள் கிடையாது. நமக்குள் நாமே என்ன கேள்வியானாலும், எப்படி வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளலாம். தனக்கு தானே கேட்டுக்கொள்ளும் கேள்விகள் சாமானியர்களை கூட சாதனையாளர்களாக்குகின்றன. ஒரு ஆப்பிள் மரத்தின் கீழ் படுத்துக் கொண்டிருந்த நியூட்டனின் மீது அந்த மரத்தில் இருந்து ஆப்பிள் வந்து விழுந்தது. இந்த ஆப்பிள் மேலே போகாமல் கீழே ஏன் விழுந்தது என்று நியுட்டன் தனக்கு தானே கேள்வி கேட்டதன் விளைவாகப் பிறந்ததுதான் நியூட்டனின் புவி ஈர்ப்பு விசை கொள்கை. பறவைகள் பறக்கும் போது நம்மால் பறக்க முடியாதா என்று ரைட் சகோதரர்களின் கேள்வியில் பிறந்ததுதான் விமானம்.

துறவிகளும், ஞானிகளும், சித்தர்களும் தனக்குத் தானே கேள்விகள் கேட்டுக் கொண்டதால்தான் ஞான நிலையை அடைந்தனர். நாம் கேட்கும் கேள்விகள் நம்மைத் தெளிவுப்படுத்திக் கொள்வதாக இருக்க வேண்டுமே தவிர, மற்றவர்களை குழப்ப வேண்டும் என்பதற்காக கேட்கப்படக்கூடாது. நம் புத்திசாலிதனத்தை வெளிப்படுத்தும் கேள்விகளாக இருப்பதை விட, மற்றவர்களின் புத்திசாலித்தனத்தை வெளிக்கொணரும் கேள்விகளாக அவை இருக்க வேண்டும்.

கேள்வி கேட்பது என்பது மனிதருக்கு இருக்கும் குணங்களில் ஒன்று. ஏன், என்ன, எப்படி, எங்கு, எப்பொழுது, எவர் ஆகிய எல்லாவற்றிலுமே கேள்விதான் தொக்கி நிற்கிறது. நம் வாழ்க்கையில் பாதி நாட்கள் கேள்விக்கான விடைகளை தேடிக் கண்டுபிடிப்பதிலேயே கடந்து விடுகிறது. அதனால், அந்த கேள்விகள் நம்மை மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். நம் வாழ்க்கைக்கு மகிழ்ச்சியை கொடுப்பதாகவும் இருக்க வேண்டும். நாம் சாதிக்க தூண்டுகோலாக இருக்க வேண்டும்.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

தகவல் தொடர்பு சாதனங்களில் ஒன்றான தந்தியின் மூலம் அனுப்பப்படும் செய்தியில் அனுப்புபவரின் முகவரியும், பெறுவோரின் முகவரியும் இருக்கும். ஆனால், வதந்தியில் அனுப்புவோரின் பெயரும் இருக்காது; பெறுவோரின் பெயரும் இருக்காது. தந்தியில் சொந்த சோகங்களும், வெந்த மகிழ்வுகளும் இடம்பெறும்; ஆனால், வதந்திகள் சொந்த இன்பத்திற்காகவும் அடுத்தவரின் அவஸ்தைகளுக்காவும் தீய எண்ணங்களுடன் பரப்பப்படும். மனிதன் பேசத் தொடங்கிய நாளிலேயே வதந்தியும் பிரசவமாகியிருக்கிறது. பண்டைய ரோமாபுரிக் கவிஞர்கள் வதந்தியை ஒரு கடவுளாகவே பாவித்து, அதற்கு உருவமும் கொடுத்துள்ளனர். ஆப்பிரிக்க நாடுகளில், குறிப்பாக நைஜீரியா, கானா, கென்யா போன்றவற்றில், வதந்தி ஒரு கலையாகவே வளர்க்கப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்காவில் வேலையில்லாமல் இருப்பவர்கள் வேலையிது என்றும் கூறுவது உண்டு. உயர்ந்த இலக்கியங்களில், ஒரு நன்மையை அல்லது சாதனையைச் சாதிப்பதற்காக, வதந்தி ஓர் உத்தியாகவே கையாளப்பட்டிருக்கிறது.

மகாகவி சேக்ஸ்பியர் அன்டனி அன்ட் கிளியோபாட்ரா, வின்டர்ஸ் டேல் எனும் இரண்டு நாடகங்களிலும், வதந்தியை ஓர் உத்தியாக, உயர்ந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறார். கிளயோபாட்ராவின் மோகவலையில் மூழ்கிக் கிடக்கும் அன்டனியை மீட்டு மீண்டும் ரோமாபுரி வீரனாக்குவதற்காக, அன்டனி மாண்டுவிட்டான் என்ற வதந்தி பரப்பப்படுகிறது. அதனைக் கேட்டு, கிளியோபாட்ரா தற்கொலை செய்து கொள்கிறாள். கிளியோபாட்ரா செத்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்ட அன்டனியும் தன்னை மாய்த்துக் கொள்கிறான்.

தியாகி ஜெயப்பிரகாஷ் நாராயணன் மறைந்துவிட்டார் என பரப்பிவிட்ட வதந்தியை உண்மையென நம்பி, அன்றையப் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், நாடாளுமன்றத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்துவிட்டார். அந்த வதந்தியால் பிறகு நாடாளுமன்றம் அல்லோகல்லோலப்பட்டதை நாடறியும்.

தந்தியில் அனுப்பப்பட்ட செய்தி தனி மனிதனுக்கு அல்லது குடும்பத்துக்கு மட்டுந்தான் துன்பத்தை அல்லது இன்பத்தைத் தரும். ஆனால் வதந்தி ஒரு கூட்டத்தை, குழுவை அல்லது நாட்டையே சேதப்படுத்தும். துள்ளித்திரியும் பள்ளிப் பிள்ளைகள் தட்டாம்பூச்சியின் துன்பம் தெரியாமல், அதன் இறக்கைகளைப் பிடித்துத் தூக்கி கல்லைத் தூக்கு எனத் துன்புறுத்தலாம். ஆனால், அறிவார்ந்த மனித இனம், மனித உயிர்களின் அருமை தெரியாமல், வார்த்தை வலைகளை வீசி, பாமர மக்களை வெள்ளத்திலும், பாலத்திலும் தள்ளிச் சீரழிக்கலாமா? மந்திரம்போல் சொல்லின்பம் வேண்டுமடா என்றார் பாரதி. மானிடரின் சொற்கள் ஏணியாக இருந்து, கீழே இருப்பவர்களை மேலே உயர்த்த வேண்டும். தோணியாக இருந்து, இக்கரையில் இருப்பவர்களை அக்கரையில் சேர்க்க வேண்டும். ஆனால், இங்கு வார்த்தைகள் வதந்திகளாகப் பிறந்து, சுருக்குக் கயிறுகளாக வளர்ந்து, அருமையான மனித உயிர்களைக் காவு கொள்கின்றன!

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

பிளாஸ்டிக் பொருள்களைக் கட்டுப் படுத்தும் கடுமையான சட்டத்தைத் தமிழக அரசு இயற்ற வேண்டும் என்று ஒரு பொதுநல வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ள நிலையில், தமிழக அரசு ஏற்கனவே அறிமுகப்படுத்திய பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்தி, விற்பனை, இருப்பு வைத்தல் தொடர்பான சட்ட மசோதாவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இருபது மைக்ரான் திடம் குறைவான பிளாஸ்டிக் கைப்பைகள் தயாரிப்புக்கு இந்தச் சட்ட மசோதா தடை விதித்திருந்தது. இச்சட்டத்தால் தொழில் நசிவும், பல்லாயிரம் பேருக்கு வேலையிழப்பும் நேரிடும் என்று பிளாஸ்டிக் பொருள் உற்பத்தியாளர்கள் கூறியதால், சட்ட மசோதாவைக் கிடப்பில் போட்டது தமிழக அரசு.

மும்பையில் பெய்த பெருமழையில் மாநகரம் முழுவதுமே வெள்ளத்தில் மிதக்கவும், மக்கள் வீடு திரும்ப முடியாத அளவுக்கு தனித் தீவுகள் உருவாகவும் நேர்ந்தபோது, அதற்குக் காரணம் சாக்கடையை அடைத்துக்கொண்ட பிளாஸ்டிக் கைப்பைகள் மற்றும் மறுசுழற்சி செய்யவியலாத பிளாஸ்டிக் பொருள்கள் என்று தெரியவந்தது. அதன் பிறகு எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், ஐம்பது மைக்ரான் திடம் குறைவாக கைப்பைகள் உற்பத்தி, விற்பனை கூடாது என்றும், ஒவ்வொரு பையின்மீதும் உற்பத்தியாளர் தனது முகவரியை அச்சிட வேண்டும் என்றும் சட்டம் வகை செய்துள்ளது. பிளாஸ்டிக் பைகளைத் தடை செய்தால் மும்பையில் பால் விநியோகம் மிகப் பெரும் பாதிப்பைச் சந்திக்க நேரும் என்றுகூட அச்சம் இருந்தது. பால் பாக்கெட், சமையல் எண்ணெய் பாக்கெட், ஷாம்பு பாக்கெட் அனைத்துமே ஐம்பது மைக்ரான் தடிமன் கொண்டவை.

இந்தப் பைகள் மறுசுழற்சிக்கு ஏற்றவை. இந்தியாவில் 45 லட்சம் டன் பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஐம்பது மைக்ரான் திடம் குறைவான பிளாஸ்டிக் கைப்பைகளுக்குத் தடை விதிக்கப்படுமேயானால், தொண்ணூறு சதவீத பிளாஸ்டிக் கைப்பைகளை மறுசுழற்சிக்கு உட்படுத்த முடியும்.

ஐம்பது மைக்ரான் தடிமனுக்குக் குறைவான பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்தத் தடை விதித்தாலே இவைகளின் பயன்பாடு மிகமிகக் குறைந்துவிடும். உணவகத் துறைக்கு அடுத்தபடியாக, மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் குப்பை என்பது சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போத்தல்கள்தான். கோலா, பெப்ஸி பானங்களின் பெட் பாட்டில்களை வாங்கிக்கொள்ளும் பழைய பேப்பர் கடைக்காரர்கள், நகரம் முழுவதிலும் இறைந்து கிடக்கும் இந்தக் குடிநீர் போத்தல்களை வாங்குவதே கிடையாது. பிளாஸ்டிக் குப்பைகளைச் சேகரிப்பவர்களும் இந்த போத்தல்களில் மூடிக்கு மட்டுமே மரியாதை கொடுத்து எடுத்துச் செல்கின்றனர். நகரச் சாக்கடைகளிலும், ரயில் பாதையிலும், நெடுஞ்சாலைகளிலும் இந்த குடிநீர்ப் போத்தல் குப்பைகள் முடிவற்றுக் கிடக்கின்றன. 50 மைக்ரான் திடமும், வண்ணமும் இல்லாத பிளாஸ்டிக் பைகளில் குடிநீர் விற்குமேயானால் இவைகளும் மறுசுழற்சிக்கு உதவி செய்யும் வகையில் அமையும்.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

எந்த மனநிலையுடன் அன்றைய தினத்தை தொடங்குகிறோம் என்பது முக்கியம். அதிகாலையில் எழும்போது உற்சாகத்துடன் எழுந்திருப்பவர்கள், முழு நாளையும் மகிழ்ச்சி முலாம் பூசி மிளிர வைப்பவர்கள். அவர்கள் ஒரு நாளில் இருபத்தைந்தாவது மணியையும் ஒரு வாரத்தில் எட்டாவது நாளையும் உண்டாக்குகின்ற வல்லமை படைத்தவர்கள். எழும்போதே எழுப்பியவர்களை சபித்துக் கொண்டு எழுந்திருக்காமல் ஊக்கத்தோடு ஒளி ஊடுறுவும் ஜன்னலை பார்ப்பவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள். சில நேரங்களில் புத்தகத்தை திறந்து வைத்து படிக்க முடியாமல் போகலாம். அப்போது வெற்று அரட்டைகளிலோ வீண் விவாதங்களிலோ நேரத்தை செலுத்தாமல் விழிகளை மூடி தியானித்து படித்தவற்றை எல்லாம் திரும்ப் நினைவுக்கு கொண்டுவந்து பாடத்தை மனதில் வேர்விட செய்யலாம். பயணம் செய்யும் போதும் தூங்குவதற்கு முன்பும் அவ்வாறு திரும்ப சொல்லிப் பார்ப்பது படித்தவற்றை திடப்படுத்த உதவும்.

தொடர்ந்து வாசிப்பது கண்களுக்கு தளர்ச்சியைத் தரும். எனவே, சுத்தமான குளிர்ந்த நீரால் அவ்வப்போது விழிகளை கழுவியும், இமைகளை மூடியும், உள்ளங் கையை அவற்றின்மீது ஐந்து நிமிடம் பதித்து ஒற்றடம் கொடுத்து உள்ளங்களை மருத்துவம் செய்து கண்களை இளைப்பாறச் செய்யலாம். நண்பர்களோடு பாடங்களை பகிர்ந்து கொள்வது விழிகளுக்கு ஒய்வு தரும். சொன்ன சொல்லையும், எறிந்த கல்லையும், கழிந்துபோன நேரத்தையும் திரும்ப பெறமுடியாது. நேரமும் நம் கைகளில் இருக்கும் வைரக்கற்கள் போன்றதுதான். நாம் அவற்றை வீசி எறிகிறோமா, போற்றிப் பாதுகாக்கிறோமா என்பது நம் கைகளில்தான் இருக்கிறது. ஒரு நொடி போனாலும் திரும்ப வராது. ஒவ்வொரு நொடியை முழுமையாக செலவழித்தால் ஓராண்டில் இரண்டு ஆண்டுகளைக்கூடத் திணிக்க முடியும். நாளை செய்யலாம் என்று செய்ய வேண்டியதை தள்ளிப் போடுபவர்கள் ஒன்றை உணரவேண்டும். நாளை என்பது வருவதே இல்லை. அப்படி வரும்போது அது இன்றாகவே வருகிறது.

சிலர் இயந்திரமாக படிப்பார்கள். அவர்கள் எவ்வளவு படித்தாலும் படித்தவை ஓட்டைப் பாத்திரத்தில் ஊற்றிய நீர்போல் ஒழுகிவிடும். விழிப்புணர்வுடன் படித்தால் அது கான்கிரீட் போல மனதைவிட்டுப் பிரியாது. ஒரு சின்னப் பயிற்சியின் மூலம் உற்றுநோக்குவதை மேம்படுத்தலாம். ஒரு மேசையின்மீது உங்கள் நண்பர் ஒருவரை ஐம்பது பொருட்களை அடுக்கிவைக்கச் சொல்லுங்கள். அவற்றை ஒரு நிமிடம் மட்டும் பார்த்துவிட்டு, மூன்று நிமிடங்களில் நீங்கள் பார்த்தவற்றை ஒரு தாளில் எழுதி, எவ்வளவு பொருட்களை சரியாக எழுதியிருக்கிறீர்கள் என்று ஒப்பிட்டு பாருங்கள். வெவ்வேறு பொருட்களை வைத்து குறைந்தது ஒரு மாதத்துக்கு இந்த பயிற்சியை மேற்கொள்ளுங்கள். அப்போது நாளடைவில் உங்கள் உற்றுநோக்கும் திறன் அதிகரிப்பதை உணர முடியும். ஒவ்வொரு பாடத்திலும் கட்டாயம் மனப்பாடம் செய்ய வேண்டிய பகுதிகள் உண்டு. மனப்பாடம் செய்ய வேண்டியவற்றை சுணக்கமில்லாமல் செய்வதுதான் சாலச் சிறந்தது.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

குற்றங்கள் ஏன் நிகழ்கின்றன. சரியான தடுப்பு முறைகள் என்ன, தனி மனிதனையும் திட்டமிட்டுக் குற்றம் புரிபவர்களையும் எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்பது சமுதாய வல்லுநர்களால் பல நூற்றாண்டுகளாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. காலப்போக்கிற்கேற்ப சமுதாய வளர்ச்சியைப் பொருத்துக் குற்றப் பரிமாணங்களும் மாறிக்கொண்டு வருகின்றனவே ஒழிய குற்றம் ஏன் நடக்கிறது என்பதற்கு விடை கிடைக்காமல் இருக்கிறது. டேவிட் ஆபிராம்ஸன் என்ற சமூகவியல் மேதை குற்ற நடப்பிற்கு காரணங்களை விகிதாசார முறையில் துல்லியமாகக் கணக்கிட முற்பட்டார். தனிமனிதனின் உள்ளக் குமுறல்கள், மன அழுத்தம் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலை இதனைச் சேர்த்து, சமுதாயக் கட்டுப்பாடு, தனிமனிதனின் நல்லியல்புகளின் எதிர்ப்பு சக்தியால் வகுத்தால் குற்றத்தின் பரிமாணம் புலப்படும் என்கிறார். அதாவது சமுதாயக் கட்டுப்பாடும், தனிமனித நற்பண்புகள் மேலோங்குதலும், குற்ற நிகழ்வுகள் குறையச் செய்யும். அதேசமயம் சமுதாயத்தில் ரம்யமான சூழல் உருவானால் தனி மனித மன அழுத்தம் குறையும். சுயக் கட்டுப்பாடு வளரும் நிலையில் சந்தர்ப்ப சூழ்நிலையும் எதிர்மறை விளைவுகளுக்கு வித்திடாது.

தனிப்பட்ட அபிப்பிராயங்கள் ஒத்து இருந்தாலும், பொதுநலன் மேலோங்கினால் தான் சமுதாயத்தில் அமைதியான சூழல் உருவாகும் எனலாம். குடும்ப வாழ்க்கை, பள்ளிகள், கல்லூரிகள், தனியார் தொண்டு நிறுவனங்கள், கேளிக்கை மற்றும் விளையாட்டு மையங்கள் போன்ற சமுதாயத்தின் நிலையான ஆதாரங்களின் கூட்டமைப்பின் மூலம் மனிதனுடையே நல்லிணக்கத்தைப் பரவச் செய்ய வேண்டும்.

அமைதியை நிலை நாட்டுதலுக்கு மூன்று கட்ட நடவடிக்கை அவசியமாகிறது. முதல் கட்ட நடவடிக்கையில் எத்தகைய மக்கள் குற்றவலையில் சிக்கக்கூடும் என்பதைக் கணித்து அவர்களுக்கு உதவிக்கரம் கொடுத்து சீரான பாதையில் எடுத்துச் செல்லுதல். இந்த நடவடிக்கையின்போது குற்றம் இன்னும் தலைதூக்கவில்லை.

இந்தத் தருணத்தில் குற்றப்பாதையைத் தவிர்த்து நல்வழிகளில் இட்டுச் செல்லும் முயற்சி முக்கியமானது. இரண்டாவது கட்டம் தண்டனையுற்றவர்களை சிறை இல்லங்களில் நல்வழிப்படுத்தும் முயற்சி. இதில் சிறைத்துறைக் களப்பணியாளர்கள், நன்னடத்தை பிரிவினர் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து குற்றம் புரிந்தவர்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்தி அவர்களுக்குள் உள்ள ஆசூயை நீக்கி நற்பாதையைத் தெரிவு செய்ய உதவி நல்க வேண்டும். மூன்றாவது கட்டம் தண்டிக்கப்பட்டவர்கள் சிறையிலிருந்து வெளிவரும்பொழுது அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பது, சமுதாயத்தோடு இணைவதற்கு ஏற்பாடு செய்வது. ஆக இந்த மூன்று நிலைகளிலும் தீர்க்கமான அணுகுமுறையோடு செயல்பட வேண்டியது இன்றியமையாதது. சமுதாயக் கட்டுப்பாட்டுக்குள் குற்றத் தடுப்பு முயற்சிகள் பிரதானமாகக் கருதப்படுகிறது. மக்கள் ஆரோக்கியத்துடன் மன உளைச்சலின்றி வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ற சூழல் உருவாக்கிட வேண்டும்.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

இந்தியா முழுவதும் சுதந்திரப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்த நேரத்தில் புதுச்சேரியில் பாரதியாரும் அவரது மாணவர் பாரதிதாசனும் தங்கியிருந்தனர். இருவரும் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் பாரதத் தாய்க்கு ஒரு சிலை செய்ய வேண்டும் என்ற அவரது விருப்பத்தை பாரதிதாசனிடம் கூறியிருக்கிறார் பாரதி. பாரதிதாசனும் ஒரு சிற்பியை வரவழைத்து பாரதத் தாய்க்கு சிலை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். சிற்பி சிலை தயாரிக்கத் தொடங்கியபோதே அவருக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. சிலையை ஏழ்மையாக இருப்பதுபோல் எளிமையாகச் செய்வதா? அல்லது ஆடை ஆபரணங்களுடன் வசதியாக இருக்கும்படி செய்வதா? என்று கேட்டார் சிற்பி.

இதைக் கேட்ட பாரதிக்குக் கோபம் வந்துவிட்டது. என் பாரதத் தாயை ஏழை என்று எப்படிச் சொல்லலாம்? எல்லாச் செல்வங்களும், வளங்களும் என் பாரதத் தாய்க்கு இருக்கத்தானே செய்கின்றன. தங்கம், வைரம், நெல், கோதுமை இவையெல்லாம் எங்கள் நாட்டில் விளையவே இல்லையா? என்றுமே வற்றாத ஜீவநதிகளும், ஆறுகளும் ஓடத்தானே செய்கின்றன. எனவே, என் பாரதத் தாயை மிகுந்த செல்வச் செழிப்போடும், ஆடை ஆபரணங்களோடும் இருப்பது போலச் செய்யுங்கள் என்று கர்ஜித்தாராம் பாரதியார். பாரதத்தாயின் மீது பாரதியார் வைத்திருந்த மதிப்பைக் கண்டு பாரதிதாசன் சிறிது நேரம் மெய் சிலிர்த்துப் போனார். இன்று நாம் காணும் பாரதத் தாய் பாரதியின் விருப்படியே ஆடை, ஆபரணங்களோடு வடிவமைக்கப்பட்டுக் காட்சி தருகிறாள். வாசலில் வந்து நின்ற குடுகுடுப்பைக்காரன் உடுக்கையடித்து நாட்டுக்கு நல்ல காலம் பொறக்குது என கூறி சொன்னான். இதைக் கேட்டவுடன் தான் அணிந்திருந்த வேட்டியைக்கூட சிறிதும் யோசிக்காமல் அவிழ்த்துக் கொடுத்த வள்ளல்தான் பாரதி. என்று தணியும் இந்த சுதந்திர தாகம்? தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம். அச்சமில்லை, அச்சமில்லை என்பன போன்ற பல பாடல்களைப் பாடினார்.

சோர்ந்து கிடந்த இளைஞர்களையும் எழுந்து உட்கார வைத்து சுதந்திர தாகத்தைத் தூண்டி அவர்களது மனங்களை உழுதவர் மகாகவி பாரதி. வறுமை, தான் வாழ்ந்து வந்த இறுதி நாட்கள் வரை கூடவே கைகோர்த்துக் கொண்டே வந்தபோதும்கூட சுதந்திரத் துக்காவும், சமத்துவத்துக்காவும் போராடத் தயங்காத மாமனிதன். கூனாதே, குனியாதே என்று தன்னுடன் இருந்த இளைஞர்களைக்கூட வளையவிடாமல் இருந்து ஒரு ராணுவ வீரனைப்போல நடந்து வந்த புரட்சியாளன். ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்று பாப்பா பாடல்கள் மூலம் சின்னஞ்சிறு பிஞ்சுகளின் உள்ளங்களைக் கூடப் பாட்டால் உழுத விவசாயி. நம் நாடு, நம் தேசம் என்றே வாழ்ந்து எழுத்துகளாலும், பாடல்களாலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிற மகத்தான மாமனிதர் பாரதியின் நினைவு தினத்தில் உறுதி எடுத்துக் கொள்வோம். கடைசிச் சொட்டு ஈரப்பசை இருக்கும் வரை மரங்கள் மலர்களைத் தருவதுபோல நாமும் பாரதி புகழ் பரப்புவோம்.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

எதையும் வருமுன் காப்பதுதான் அறிவுடைமை. ஆனால் நாம் வந்த பின்னர் காரணத்தைத் தேடி அலைகிறோம். சுற்றுச்சூழலை மாசுபடுத்திவிட்டு கேள்வி கேட்டு என்ன பயன்? மழை தவறாமல் பெய்தால்தான் மக்கள் நன்றாக இருப்பார்கள். மக்கள் மகிழ்ச்சியோடு இருந்தால்தான் நல்லாட்சி நடக்கிறது என்பது பொருள். செங்கோல் தவறினால் நாட்டில் ஒழுங்காக மழை பெய்யாது. இயற்கை பொய்த்துப் போகும் என்பது நம்பிக்கை. இயற்கையைப் பகைக்கிறபோது எல்லாமே எதிராகும். காலங்கள் மாறினாலும் இயற்கையோடு இயைந்து செயல்பட வேண்டுமே தவிர, எதிர்த்து நின்றால் எல்லாமே தலைகீழாய் மாறிவிடும். பூமியே அழுக்காகும், வானமும் அழுக்காகும், மனித குலமே அழுக்காகிவிடும். இப்போது அறிவியல் வளர்ந்த அளவுக்கு அதனால் அழிவுகளும் வளர்ந்து கொண்டிருக் கின்றன. நில அதிர்வுகளும், கடல்கோள்களும் பெருகி மனித சமுதாயமே கடுமையான அச்சுறுத்தலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது. எப்போதையும்விட இப்போதுதான் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதுமட்டுமல்லாமல் இப்போது ஓர் அறிவியல் செய்தி உலகையே அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. இந்த உலக உருண்டையின் வெப்ப அளவு கூடிக்கொண்டிருக்கிறது. பூமி சூரியனிலிருந்து எடுத்துக் கொள்ளும் வெப்பம் அதிகமாக இருப்பதாகவும், திருப்பி அனுப்பும் வெப்பம் குறைவாக இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் பூமிக்கே பெரும் ஆபத்து காத்திருக்கிறது. இவ்வாறு பூமியின் வெப்பம் அதிகரித்துக் கொண்டே போவதால் வட தென் துருவங்களின் மிகப் பெரிய அளவிலான பனிப்பாறைகள் உருகிக் கடல் மட்டம் உயர்ந்து கொண்டே போகிறது. இதனால் பூமியின் நிலப்பரப்பு குறைந்து கொண்டே போகிறது. கார்பன்-டை-ஆக்சைடு, மீத்தேன் மற்றும் தூசுகள் மனிதர்களின் செயற்கையான செயல்பாடுகளால் வான்வெளியில் கலந்து சூரிய வெப்பத்தைப் பிடித்து வைத்துக்கொள்வதால் நமது பூமியின் வெப்பம் கூடிக்கொண்டே போகிறது என்கிறது அறிவியல் உலகம்.

அன்று வெள்ளமாக ஓடிய ஆறுகள் இப்போது வெறும் மணல்வெளியாக இருப்பதோடு அந்த ஆற்று மணலுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. யாரும் விளைவிக்காமலேயே கண்ணுக்கு எட்டிய தூரம்வரை மண்டிக்கிடந்த காடுகள் இப்போது எங்கே? மனிதனின் பேராசைக்கு அவையெல்லாம் பலியாகி விட்டனவே. இப்போது நெல் விளையும் பூமிக்கும் ஆபத்து வந்துவிட்டது. ஏரி குளங்களுக்கும் ஆபத்து வந்துவிட்டது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களாகவும், வீட்டுமனைகளாகவும் மாறிக் கொண்டிருக் கின்றன. இயற்கை கோடிக்கணக்கான உயிரினங்களைப் படைத்துள்ளது. அவை எதுவும் இயற்கையைப் பாதிக்கவில்லை. இயற்கையோடு போட்டி போடவும் இல்லை. அவை இயற்கையின் போக்கில் வாழ்ந்து வருகின்றன. ஆனால் மனிதன் மட்டும்தான் இயற்கையோடு மோதி அந்த இயற்கையையே மாற்றுகிறான். உண்மையில் தனது பேராசையால் இயற்கையை ஆபத்தானதாக மாற்றி விடுகிறான். இந்த மாற்றம்தான் காலநிலை மாற்றம் என்று கூறப்படுகிறது.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

படிக்காமலே வாழ்க்கையில் முன்னேறிய சிலரை முன்னுதாரணமாக்கி, அவர்கள் எல்லாம் படித்தார்களா என்று விதண்டாவாதம் பேசுபவர்களும் இருக்கிறார்கள். படிக்காமல் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள், சாதனை செய்தவர்கள் விதிவிலக்குகளே தவிர எடுத்துக் காட்டுகள் அல்ல. ஆபிரகாம் லிங்கனோ, காந்தியடிகளோ, நேருவோ படித்திருக்கா விட்டால் என்ன ஆகியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாது. ஷேக்ஸ்பியர் பல்கலைக்கழகத்தில் போய் படித்தவர் அல்ல. ஆனால், எல்லாத் துறையிலும் நிபுணத்துவம் இருந்திருக்குமோ என்று நினைக்கும் அளவுக்கு இயற்கை எனும் நூலகத்தில் நுண்மான் நுழைபுலம் பெற்றவர். படிப்பு என்பது பள்ளிக் கட்டடங்களோடு முடிந்து விடுவதல்ல. வாழ்க்கை முழுவதும் தொடர்வது.

படிப்பு தன்னம்பிக்கையை தருகிறது. அலசி ஆராய கற்றுத்தருகிறது. எழுதவும், பேசவும் கல்வி அவசியம். விவசாயம் செய்தாலும் வியாபாரம் செய்தாலும் கல்வி கற்றவன் அத்துறையில் ஜொலிக்கிறான். நம்மைச் சுற்றியிருக்கின்ற எல்லாவற்றை பற்றியும் அறிந்து கொள்ளவும் அவற்றை பேணிக்காக்கத் தெரிந்து கொள்ளவும் கல்வி முக்கியம். ஒரு கணினியைக் காட்டி இது மனிதக் கணினி என்றார் அதைக் கண்டுபிடித்த விஞ்ஞானி. மனிதக் கணினியா, அப்படியென்றால் என்ன என்றார் அதைக் கேட்டவர். இது தான் செய்யும் தவறுகளுக்கு மற்ற கணினிகளின் மீது பழியைப் போடும் என்றார் அதைக் கண்டுபிடித்தவர். நாமும் நம்முடைய தோல்விகளுக்கெல்லாம் அடுத்தவர்களை பொறுப்பாக்குகின்றோம். நாம் உழைக்க தவறி விட்டோம். கவனமாக இருக்க மறந்துவிட்டோம் என்கிற உண்மையை உணர்வதில்லை. சரியாக திட்டமிட்டு பணியாற்றுபவர்கள் அதிர்ஷ்டத்தை நம்புவதில்லை. அவர்கள் தன்னை மட்டுமே நம்புகிறார்கள். எனவே, படிப்பும் உழைப்பும்தான் ஒரு மனிதனை உயர்த்தக் கூடியவை என்பதை மனதில் நிறுத்தி முயற்சி செய்ய வேண்டும். தேர்வுக்கு தயாரிப்பதை விஞ்ஞான ரீதியாக அணுக வேண்டும்.

ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்தும் போது உற்று கவனிக்கிற மாணவன் நிறைய செய்திகளை கிரகித்துக் கொள்கிறான். அவனுக்குள் பாடத்தைப் பற்றிய புரிதல் நிகழ்கிறது. பெரும்பாலான தகவல்கள் அவனுடைய குறைந்த கால நினைவாற்றலுக்கும், நீண்ட கால நினைவாற்றலுக்கும் அனுப்பப்படுகின்றன. அவன் அவற்றை சுயமாகப் படிக்கும்போது தங்கு தடையில்லாமல் தக்க வைத்துக் கொள்ளவும் வெளிப்படுத்தவும் முடிகிறது. மறதியை பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் ஒரு உண்மையை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு செய்தியின் பெரும்பகுதி முதல் ஒன்பது மணி நேரத்தில் மறந்து போகிறது. அதற்கு பிறகு ஏற்படுகிற மறதி சொற்பமே. எனவே, வகுப்பில் உற்று கவனிப்பதன் மூலமும் பிறகு கவனித்தவற்றை உடனடியாக ஒத்திகை பார்ப்பதன் மூலமாகவும் மறதியின் முதுகில் சவாரி செய்ய முடியும். பாடத்தில் முழு சிந்தனையையும் செலுத்தி அக்கறையோடு கவனிக்கிற போது ஆசிரியரும் பாடமும் மட்டுமே கண்முன்னே நிற்கும்.

இரட்டை வரி இடைவெளியில், 10 டிகிரி இடது ஓரம் விட்டு கீழ்க்கண்ட பகுதியை தட்டச்சுசெய்க

ஒரு செய்தி ஒன்பது மணி நேரத்துக்குள் தொண்ணூறு சதவீதம் மறந்துவிடுவதால், அன்று வகுப்பில் நடந்ததை அன்றே படித்துவிடுவது நல்லது. அதன் மூலம் ஆசிரியர் நடத்திய பாடங்கள் நன்றாக புரிவதோடு மென்று தின்று ஜீரணிக்கிற உணவைப்போல உடலில் ஐக்கியமாகிவிடுகிறது. அதனால் எப்போது கேட்டாலும் அதை தெளிவாக சொல்லவோ, எழுதவோ முடிகிறது. அன்றன்று படிப்பதால் மூளையின் மேல் பரப்பில் மட்டும் செய்திகள் தங்காமல் மூளையின் மையப்பகுதியில் அவை நுழைந்துவிடுகின்றன. நம் உறவினர்களின் பெயர்களைப் போல, நம் வீட்டு முகவரியைப் போல அவை அழியாமல் இடம் பெற்றுவிடுகின்றன. பல மாணவர்களுக்கு தேர்வு குறித்த பயம் உள்ளது. நன்றாகப் படித்தாலும் தேர்வு அறைக்குள் நுழைந்ததும் ஏற்படுகின்ற பயத்தில் எல்லாம் மறந்து போனது போன்ற மனநிலை. படித்ததை எல்லாம் எழுத முடியவில்லை. தெரிந்ததை எல்லாம் வெளிப்படுத்த முடியவில்லை என்கிற சூழல்.

இதிலிருந்து விடுபடுவதற்கு ஓர் எளிய வழி உண்டு. மேஜர் ஜேம்ஸ் மேஸ்மெத் என்பவர் கால்ஃப் விளையாடுபவர். இந்த விளையாட்டில் சிறந்தவர் என்று சொல்ல முடியாது. வார இறுதியில் கால்ஃப் விளையாடும் சராசரி மனிதராக இருந்த அவர் ஏழு ஆண்டுகளுக்கு கட்டாயமாக அந்த விளையாட்டைத் துறக்க நேரிட்டது. காரணம், வடக்கு வியட்னாமுடன் நடந்த போரில் அவர் போர்க் கைதியாக பிடிபட்டு சிறையில் இருக்க வேண்டியதாயிற்று. முதல் சில மாதங்கள் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. பொழுதும் போகவில்லை. தன்னை சீக்கிரம் விடுதலை செய்ய வேண்டும் என்பதே அவர் பிரார்த்தனையாக இருந்தது. தனிமை அவருக்கு பெரும் பிரச்சனையாக இருந்தது. அவருடைய மனதில் ஒரு கால்ஃப் மைதானத்தை நிர்மாணித்தார். தினமும் கற்பனையிலேயே கால்ஃப் விளையாட ஆரம்பித்தார். தினமும் பதினெட்டு துவாரங்கள் கொண்ட மனத் தயாரிப்பாலான மைதானத்தில் கால்ஃப் விளையாடுகிற உடைகளை அணிந்து கொண்டார்.

மேஜர் ஜேம்ஸ் மேஸ்மெத் செய்த மனப்பயிற்சி ஏழு ஆண்டுகளுக்கு பிறகு அவர் கால்ஃப் மைதானத்தை அடைந்த போது மிகுந்த தேர்ந்த விளையாட்டு வீரரைப்போல அவரை விளையாடச் செய்தது. மேஜர் மேஸ்மெத்துடைய அந்த ரகசியம் விசுவலைசேஷன் என்பதாகும். இந்த நிலை மாணவர்களிடத்திலும் நாம் கையாள முடியும். தேர்வுக்கு ஒரு மாதம் இருக்கும்போது கண்களை நன்கு மூடி தேர்வு எழுதுகிற தயாரிப்பில் அவர்களை ஈடுபடுத்தச் செய்யலாம். ஒவ்வொரு கேள்விக்கு நேரம் ஒதுக்குவதையும், அந்த நேரத்துக்குள் அதை முடிப்பதையும், விடைத்தாள்களை எழுதுகோலால் முத்தமிடச் செய்வதையும், பதட்டம் இன்றி கேள்விகளை அணுகுகிற பக்குவத்தையும், ஒவ்வொரு முறையும் கேள்விகளுக்கான விடையையும் கேள்விகளையும் சரியாகப் பார்த்து பார்த்து எழுதுகின்ற அவசரத்தன்மையும், எழுதி முடித்ததும் கோடிடுவதையும், அவர்களால் காட்சிப்படுத்த முடியுமானால், அவர்கள் தேர்வை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ள முடியும்.

நேரம் பதினைந்து நிமிடங்கள்
கீழ்கண்டதை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடபுற ஓரம் விட்டு டைப் செய்யவும்

(பிழையின்றியும் அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக் கவனம் செலுத்தப் பெற வேண்டும்)

நல்வழி நம்வழி

சுதந்திரம் என்றால் என்ன ? மனிதன் எல்லா நிலையிலும் பெறுகின்ற சுதந்திரம்தான் உண்மையான சுதந்திரம். நாமோ இன்று ஆங்கில அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு இந்திய அடிமைக்கு உள்ளாகி இருக்கின்றோம். நாம் ஆங்கிலேயனை விரட்டி, சொந்த நாட்டானுக்கு அடிமையாகிவிட்டோம். மனச்சாட்சிக்கு விரோதமின்றி மனிதப் பண்புடன் பதில் அளியுங்கள். இன்று எங்குதான் அடிமைத்தனம் இல்லை. வீட்டிலிருந்து வீதி வரையும், ஊரிலிருந்து நாடு வரையிலும் எங்கும் ஒரே அடிமை மயம்தான். வீட்டில் எந்தப் பிரச்சனை வந்தாலும் சண்டைதான். இன்னும் வேடிக்கை என்னவெனில், ஒரு வீட்டில் தலைமகன் கண்ணை மூடினால், ஓர் உலகப் போரே மூண்டுவிட்ட போலத் தோன்றும். தெருவிலோ தினமும் அல்லோல கல்லோலம்தான். குழாயடி சண்டை, கடன் சண்டை, குழந்தைகள் சண்டை போன்றவையும், இதைவிட அற்பமான வையும்தான். தேர்தல் காலங்களிலோ சொல்ல வேண்டியதே இல்லை. நிலைமை படுமோசம். தேர்தல் நடப்பதோ மனித வாழ்க்கையின் சுதந்திரத்துக்கும், இன்பத் திற்கும்தான். ஆனால் நடப்பதோ கொலையும், கொள்ளையும். இவையாவும் மக்களை அடிமைத்தனத்தில் சிக்க வைக்கத்தான். இது தானா காந்தியடிகளால் அளிக்கப்பட்ட சுதந்திரம் ? மேற்கூறிய போருக்கும், நாசத்திற்கும் காரணம், இதோ தென்படும் இரண்டு பேய்களான பணமும் – புகழும்தான்.

நம் கண்கள் உண்மைச் சுதந்திரத்தின் இன்பத்தைக் காணத்துடிக்கின்றன. அதனைச் சற்று நோக்குவோம். உண் மையில் சுதந்திரம் என்பது, நமது வாழ்க்கையில் மட்டுமின்றி சிந்தனை, பேச்சு, எழுத்து, உண்மை, பொறுமை, பணம், பாசம், பற்று ஆகிய அனைத்திலும் தென்பட வேண்டும். சந்தேகமின்றி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மனிதனின் ஜீவாதார உரிமைகள் பற்றி நீண்ட பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்தியக் குடிமகன் அந்த உரிமைகளை எங்கு பயன்படுத்துகிறார் ? அவனது நடைமுறை வாழ்க்கையில் அவை பிரதிபலிக்கின்றனவா ? இல்லை.

இவ்வளவு உரிமைகளை அவன் பெற்றிருந்தும் இந்தியக் குடி உரிமையுடன் அவனால் வாழ இயலவில்லை. அதில் காணப்படும் மனிதர்களால் செய்யப்பட்ட கோட்பாடுகளின் தவறுகள் தான் அவற்றிற்குக் காரணம் ஆகும். அவைகள் தாம் சுதந்திரத்தைக் குழி தோண்டிப் புதைக்கின்றன. இவற்றைத் தான் நாம்

சுதந்திரம் என்று பொன் எழுத்துக்களால் பொறித்து வைத்து மகிழ்ச்சி அடைகிறோம். சுதந்திரம் என்பது உண்மையும், சிறப்புத் தன்மையும் கொண்ட ஓர் மனதால் தான் அளிக்க முடியும். மனிதனின் வணக்க முறையின் சரியான பாதையைப் பலப்படுத்தவும், மனிதனை நேரான வழியில் சீராக நடத்திச் செல்லவும், மனிதனின் உண்மை நிலையை உணர்த் தவுமே மதம் தோன்றுகிறது.

முதலாவதாக வணக்க முறையின் சீரான பாதையை மனம் எவ்வாறு புலப்படுத்துகிறது என்பதனைப் பார்ப்போம். மனிதன் இயற்கையிலேயே தன்னைவிட உயர்வான ஒரு சக்திக்கே தலை குனி கிறான். அதே சமயம் அவனுடைய இந்த சிற்றறிவு தன்னைப் படைத்தவனை அறியும் ஆற்றலை இழந்து விட்டிருக்கிறது. ஏனெனில், இன்று ஒரு பொருளை மிகவும் உயர்ந் ததாகக் கருதும் அறிவு நாளை அதையே சற்று உயர்ந்து பார்த்து அதைத் தன் கரத்தினால் அடக்கும் ஆற்றலைக் கொண்டது. நம் அறிவு பல நேரங்களில் பல பொருள்களை அதன் பல்வேறு தன்மை களையும் பற்பல கோணங்களிலும் கண்டு அதன் உண்மையைப் பலவாறாக உணரும் தன்மையுடையது. எனவேதான் உலகில் பல்வேறு மனங்கள் மாறி மறைகின்றன. சில மனங்களோ அழியாப்புகழ் பெற்றுத் திகழ்கின்றன. அதே சமயத்தில் அது பரவுவதும் இல்லை. மறைவதும் இல்லை. இக்காலை ஓர் உண்மை மனம் உள்ளதை நாம் மறக்கக் கூடாது. இரண்டாவதாக மனம் மனிதனை எப்படி நேரான வழியில் சீராக நடத்திச் செல்கிறது என்பதைப் பார்ப்போம். மனிதன் தன் அறிவின் மூலம் தனக்கு தானே நேரிய வழிகளை அடைந்திட முடியாது. ஒரு சமயம் அவன் கடவுளுக்கு ஒரு உருவம் இருக்கக் கூடும் என்று கற்பனை செய்கிறான். பிறகு அறிவு முதிர்ச்சி பெற்றதும் மறு சமயம் கடவுளுக்கு உருவமே இல்லை என்கிறான்.

நாம் அழுதுகொண்டே பிறக்கிறோம், சுற்றியிருப்போர் சிரித்து மகிழ்கின்றனர். இறக்கும்போது நாம் சிரித்து பிறர் அழவேண்டும். இறக்கும்போது சிரிப்பது என்பது 'நாம் நமது வாழ்வில் அனைத்து கடமைகளையும் செவ்வனே செய்துவிடோம்' என்கிற மனநிறைவுடன் இறப்பது. பிறர் அழவேண்டுமென்பது, 'ஐயகோ! நல்லதொரு மனிதர் நம்மைவிட்டுப் போய்விட்டாரே' என உண்மையில் உளமுருகச் செய்ய வேண்டுமென்பது. ஆனால் எத்தனைப் பேர் வாழ்வில் இப்படி நடக்கிறது. மரணப் படுக்கையிலிருப்பவர் அழுகிறார். சுற்றியிருப்பவர்கள், திட்டுகிறார்கள். தூற்றுகிறார்கள். இந்த நிகழ்ச்சி எதைக் காட்டுகிறது ? இறந்தவன் எப்படி வாழ்ந்திருப்பான் என்பதைக் காட்டுகிறது.

நேரம் பதினைந்து நிமிடங்கள்
கீழ்கண்டதை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி
இடபுற ஓரம் விட்டு டைப் செய்யவும்

(பிழையின்றியும் அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக் கவனம் செலுத்தப் பெற வேண்டும்)

உணவுப் பற்றாக்குறை

இந்தியாவின் வரலாற்றில் உணவுப் பற்றாக்குறை என்பது ஒரு தனித்த நிலைத்த குறையாக இருந்து வந்திருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் அந்தப் பற்றாக்குறை மிகுந்த அளவில் வளர்ந்தது. இன்றைய சுதந்திர ஆட்சியில் அது பெருஞ்சுமையாகக் கனத்துவிட்டது. நோயோடும் அறியாமை யோடும் போராடி, அவற்றை இந்தியாவை விட்டு துரத்த முயலும் நாம் உணவுப் பற்றாக்குறையோடும் போராடி அதை இந்நாட்டை விட்டு நீக்கவேண்டும். இந்தப் பணியைச் செய்வது கடினமானது என்றாலும், உடனடியாகச் செய்யப்பட வேண்டியதொன்றாகும். இந்தியக் குடிமகனும் மேலை நாட்டுக் குடிமக்களைப் போல நலம் கொண்ட உடலும், வளமுள்ள வாழ்வும் பெற்று வாழ வேண்டுமானால், இந்தியா உணவுப் பொருள்களில் தன்னிறைவு பெற்றே தீரவேண்டும். அதற்கான வழிகளைக் காண்பது இன்றியமையாததாகும். இயற்கை வளங்களை ஏராளமாகப் பெற்றுள்ள நாடு இந்தியா. ஆனால், அதன் மண் வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள இந்தியர்கள் தவறிவிட்டனர். இதனால் பன்னூறு ஆண்டுகளாக, இந்திய மண் வளம் வெளிக்கிளம்பாமல் இருட்குகைப் புதையல்போல் கிடந்து வந்திருக்கிறது. இந்திய விவசாயி ஜப்பானிய சாகுபடி முறைபோன்ற புதுமை முறைகளால் மண் வளத்தை முழுக்கப் பயன்படுத்த வேண்டுமூ. காய்ந்துகிடக்கும் நிலத்திற்கு நீர் ஊற்றி உழுது பயிர் செய்தால் இந்தியாவின் உணவு உற்பத்தி பெருகும். அதனால் உணவுப் பற்றாக் குறை ஒழியும். இதற்கான வழியில் அரசு தற்போது கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். மண்ணைச் சாறு பிழியாதது போலவே, தன்னையும் சாறு பிழிந்து மக்கள் உழைப்பது இல்லை. இந்தியாவில் மனித உழைப்பு மிகக் குறைவு. அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளில் உள்ள விவசாயிகளைப்போல ஆண்டு பூராவும் பயிர்த்தொழில் செய்ய இந்திய விவசாயிக்கு வாய்ப்புகள் இல்லை. ஓராண்டில் ஆறு திங்கள்

மட்டுமே உழைக்க முடிகிறது.மற்ற ஆறு திங்கள் வேலையின்றியே கழிக்கும் நிலைமை யுள்ளது. இதற்குக் காரணம் இந்தியாவில் உள்ள தட்பவெட்ப நிலைகளேயாகும். ஆகவே, மற்ற ஆறு திங்களில் அவர்கள் உழைத்து, உற்பத்தியைப் பெருக்க பல்வேறு குடிசைத் தொழில்களை கிராமப்புறங்களில் ஏற்படுத்தியாக வேண்டும். உழைக்காத நாட்டில் உற்பத்தி பெருகாது. உற்பத்தி இல்லாத நாட்டில் உணவுப் பற்றாக் குறை ஒழியாது.

விளைந்த தானியங்களைச் சேமிப்பது ஓர் அரிய கலை. இன்று இந்தியாவில் அந்தக்கலை நன்கு வளரவில்லை. ஆறுவடையானவற்றை ஆண்டு முழுவதும் சேமித்து வைக்கும் வசதி உழவனுக்கு இல்லை. மூங்கில் குதிர்கள் தாம் அவனுக்கு சேமிப்பு நிலையம். அதில் உள்ளவற்றைக் கள்வர்கள் கவரலாம். செந்தீ சாம்பலாக்கலாம். கறையான் அழிக்கலாம். கருவண்டு துளைக்கலாம். இவற்றுக்கெல்லாம் மேலாகப் பெருச்சாளிகள் தம் விருப்பம்போல் உண்டு கொழுக்கலாம். இவ்வாறு பலவகையில் இந்தியாவில் உணவுப் பண்டங்களில் பெரும்பகுதி பாழாகிறது. காய்த்த பயிரை வெட்டுக்கிளிகளிடமிருந்து காப்பாற்றுவது முதல், அறுத்தபயிர் மணிகளைப் பெருச்சாளிகளிடமிருந்து காப்பாற்றுவது வரை உழவன் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, பொருள்களைக் காக்க புது முறைகள் மேற்கொள்ளப்பபட வேண்டும். உலோகக் குதிர்களைப் பயன்படுத்தினால் பெருச்சாளிகள் தொல்லைகள் நீங்கப் பேருதவியாக இருக்கும்.

இல்லத்தைச் சுற்றிப் பூந்தோட்டம் அமைப்பது இன்றைய நகர மாந்தர்க்கு நாகரீகம். அந்தப் பூந்தோட்ட நாகரீகத்தைக் கொஞ்சம் மாற்றிக் காய்கறித் தோட்டம் வளர்க்க முன் வரவேண்டும். வண்ணம் காட்டி வாடி வதங்கும் மலர்த் தோட்டத்தைக் காட்டிலும், உண்ணும் வயிற்றை ஓரளவாகிலும் நிறைவுபடுத்தும் காய்களித் தோட்டமே அழகானது என்ற நாகரீகச் சிந்தனை வளருமானால், உணவுப் பற்றாக்குறையின் கொடுமையை ஓரளவு குறைக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, எவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டு உணவைப் பெருக்கினாலும், மக்கள் தொகை பெருகிக் கொண்டே போனால் பற்றாக்குறை இருந்தே தீரும். ஆகவே அதைக் குறைக்க திட்டமிட வேண்டும்.